உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் கோப்பை - 2025

# செஸ் சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவிற்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, ஜூன்.29-

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற UzChess மாஸ்டர்ஸ் கோப்பை 2025இல் சாம்பியன் பட்டம் வென்ற செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்து தெரிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**UzChess மாஸ்டர்ஸ் கோப்பை 2025இல் வென்றதற்கும், கிளாசிக்கல் வீரர் தரவரிசையில் இந்திய அளவில் முதலிடத்தைப் பிடித்ததற்கும், லைவ் ரேட்டிங் மதிப்பீட்டில் உலகின் நம்பர் 4 வீரராக உயர்ந்ததற்கும் பிரக்ஞானந்தாவுக்கு வாழ்த்துகள்.**

**வெற்றிப் பாதையில் தொடரும் வாகையரான அவரது கரங்களில் செக்மேட் செய்யமுடியாத எதிர்காலம் உள்ளது!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




பல்லாவரம் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(BLA2) கலந்து ஆலோசனைக் கூட்டம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல தேர்தல் பணிகள் பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி., கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் களப்பணி தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள். அப்பொழுது கழகத் தீர்மானக்குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தொ.மு.ச. இரா. பொன்ராம், துணை மேயர் கோ.காமராஜ், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர்கள் அ.தமிழ்மாறன், என்.நவீன், பகுதி கழகச் செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், இ.எஸ் பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




